உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No. 71/2024

| | |
|---|---|
| பெயர் | :திலகம்(அ.சா.4) |
| தகப்பனார் பெயர் | : |
| கணவர் பெயர் | :செல்வமணி |
| வயது | :51 |
| கிராமம் | :அய்வைத்தான்பட்டி, கம்பூர் |
| வட்டம் | :மேலூர் |
| தொழில் | :விவசாயம் |

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

22.07.2025

முதல் விசாரணை**:**

அ.சா.1 சரவணகுகன் என்னுடைய வளர்ப்பு மகன் ஆவார். தீபன் சக்கரவர்த்தி அ.சா.3 என்னுடைய மகன் ஆவார். செல்வமணி அ.சா.2 என்னுடைய கணவர் நான் ஐவைத்தான் பட்டியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் 3வது எதிரி என் கணவருடன் பிறந்த சகோதரர் ஆவார். மற்ற 2 எதிரிகளும், 3வது எதிரியின் மகன்கள் ஆவார்கள். கடந்த 10.01.2023 அன்று அ.சா.3 தீபன் சக்கரவர்த்தி வீடு கட்டுவதற்காக வெளிநாட்டில் இருந்து எங்கள் வீட்டிற்கு வந்திருந்தார். அப்போது என்னுடைய வீட்டு வாசலை மறித்து ஆஜர் 3 எதிரி காம்பவுண்ட் சுவரை எழுப்பினார். அதை என் மகனான அ.சா.3 தீபன் சக்கரவர்த்தி எனது கணவரான அ.சா.2 செல்வமணியிடம் கேட்டார். அப்போது ஆஜர் 3வது எதிரி அபிமன்னன் என் மகனிடம்அவருக்கு என்ன இடம் இங்கு இருக்கிறது என்று கேட்டு, அசிங்கமான வார்த்தைகளை பேசி அவர் வீட்டிற்குள் சென்று அரிவாளை எடுத்து கொண்டு வந்தார். அப்போது அ.சா.1 ஆன என்னுடைய வளர்ப்பு மகனான சரவண குகன் எதற்காக அசிங்கமாக பேசுகீறிர்கள் என்றுகேட்ட போது, அபிமன்னன் கையில் வைத்திருந்த அரிவாளை 1ம் எதிரி செல்வேந்திரன் வாங்கி அ.சா.1 சரவணகுகனை 2வது எதிரி வெற்றிசெல்வன் கையை இறுக்க பிடித்து கொள்ள ஆஜர் 1வது எதிரி அ.சா.1ஐ தலையில் ஓங்கி வெட்டிவிட்டார். மேற்படி சம்பவம் என் வீட்டுக்கு

அருகே நடந்தது. 3வது எதிரி அபிமன்னன் இரும்பு ராடை வைத்து அ.சா.1 சரவணகுகனை கையிலும், இரண்டு கால்களிலும் தாக்கினார். அ.சா.1 சரவணகுகனுக்கு மண்டை உடைந்துவிட்டதால் அ.சா.3 தீபன் சக்கரவர்த்தி அவரை கருங்காலக்குடி அரசு மருத்துவமனைக்கு முதலுதவிக்கு எடுத்து சென்றார்கள். அங்கு பார்க்க முடியாது என்று கூறிவிட்டதால் மேலூர் அரசு மருத்துவமனைக்கு சரவணகுகன்(அ.சா.1) அழைத்து சென்றார்கள். மேலூரிலும் பார்க்க முடியாது என்று கூறவே அ.சா.1ஐ மதுரை அரசு மருத்துவனைக்கு அழைத்து சென்றுவிட்டார்கள். அங்கு ஒருநாள் உள்நோயாளியாக சிகிச்சை அளித்து மறுநாள் மதியம் நேரம் தெரியவில்லை, மருத்துவமனையில் இருந்து அ.சா.1ஐ விடுவித்துவிட்டார்கள். அதன்பிறகு கொட்டாம்பட்டி காவல்நிலையத்திற்கு சென்று நான், என் கணவர் செல்வமணி, அ.சா.1 சரவணகுகன் ஆகியோர் சென்று புகார் அளித்தோம். அ.சா.பொ.1 சாட்சியிடம் காட்டப்பட்டு சாட்சி அதைதான் ஆஜர் 3வது எதிரி எடுத்து வந்து 1வது எதிரி அ.சா.1ஐ வெட்டியதாக குறிப்பிடுகிறார். இதுதொடர்பாக காவலர்கள் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

என்னுடைய மகனான அ.சா.3 தீபன் சக்கரவர்த்தி வெளிநாட்டில் இருந்து 10.01.2023 அன்று தான் எங்கள் வீட்டிற்கு வந்தார். அ.சா.1 சரவணகுகன் என்னுடைய வளர்ப்பு மகனை சொத்துக்காக வந்துவிடுவார் என்பதற்காக ஆஜர்எதிரிகளுக்கு பிடிக்கவில்லை. எனக்கு ஏற்கனவே மகன் இருக்கிறார். மகன் இருக்கும் போது வளர்ப்பு மகனுக்கு சொத்து போகாது என்று எனக்கும் தெரியும், ஆஜர் எதிரிகளுக்கும் தெரியும் என்றால் சரிதான். சொத்திற்காக அ.சா.1ஐ நாங்கள் வளர்ப்பது எதிரிகளுக்கு பிடிக்கவில்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சண்டை நடக்கும்போது, நான் வீட்டிற்கு வாசலில் நின்று கொண்டிருந்தேன். அ.சா.1ஐ 2வது எதிரி கைகளை பிடித்து கொள்ள முதல் எதிரி அரிவாளால்

மண்டையில் வெட்டினார் என்ற விபரத்தை காவல்விசாரணையில் கூறியிருக்கிறேனா என்றால் கூறியிருக்கிறேன். போலிஸ்விசாரணையில் சம்பவம் நடக்கும் போது ஊர்க்காரர்கள் வந்தார்கள் ஆனால் ஓடிவிட்டாக்ள் என்று குறிப்பிட்டுள்ளதை யார் யார் வந்தார்கள் ஓடினார்கள் என்று சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. சம்பவத்திற்கு மறுநாள் அ.சா.1 அரசு மருத்துவமனையில் இருந்து முறைப்படி விடுவிக்கபடவில்லை என்றும், அவர் மருத்துவமனையில் இருந்து மருத்துவர்களின் அனுமதி பெறாமல் அவராகவே வெளியேறிவிட்டார் என்றால் சரியல்ல. மருத்துவமனையில் இருந்து எந்த நேரம் அ.சா.1 விடுவிக்கப்பட்டார் என்பது தெரியிவில்லை என்பதால் அவர் விடுவிக்கப்பட்டாரா என்பது தெரியவில்லை என்றால் நான் மருத்துவமனையில் தான் இருந்தேன் எந்த நேரம் என்று குறிப்பிட்டு சொல்லமுடியாது மதியம் சுமார் 2-3 மணிக்குள் விடுவிக்கப்பட்டார். அங்கிருந்து கொட்டாம்பட்டி காவல்நிலையத்திற்கு சென்றோம். மாலை சுமார் 5 மணியளவில் கொட்டாம்பட்டி காவல்நிலையத்திற்கு சென்றோம். நான் தவறாக சொல்கிறேன் என்றும், மருத்துவமனையில் இருந்து விடுவித்த பிறகு பார்ப்பதற்காக நாங்கள் நால்வரும் சென்ற போது 3வது எதிரி அ.சா.1 மற்றும் 3 வெட்ட முற்பட்ட போது அதை கருப்பாயி, ஆஜர் 3வது எதிரியின் அக்கா தடுக்க முற்பட்ட போது அவர் கையில் வெட்டுப்பட்டது என்றும் அதை மறைத்து பொய் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் அங்கு செல்லவுமில்லை, கருப்பாயி வெட்டுவதை தடுக்கவுமில்லை. மேற்படி சம்பவம் தொடர்பாக எங்கள் மீது கொட்டாம்பட்டி காவல்நிலையத்தில் முதல் தகவல்அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் தவறாக சொல்கிறேன் என்றும் கொட்டாம்பட்டி காவல்நிலையத்தார் குற்ற எண்.13/2023 என்ற முதல் தகவல் அறிக்கையை எங்கள் மீது பதிவு செய்திருக்கிறார்கள் என்றும், மேற்படி வழக்கில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு வழக்கானது, மாண்புமிகு மாவட்ட

நீதிமன்றம்,மதுரைக்கு மேல்விசாரைணக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. நானும்,அந்த வழக்கில் 4வது எதிரி என்றால் நான் பின்னிட்டு ஜாமீன் எடுக்கும் போது தான் தெரிந்து கொண்டேன். 10.01.2023 அன்று நான் கூறுவது போல ஆஜர் எதிரிகள் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ வெட்டவும் இல்லை, அடிக்கவும் இல்லை என்றும் முன்பகையை மனதில் வைத்து கொண்டு, 11.01.2023 அன்று மதியம் 3 மணியளவில் எதிரிகளை தாக்க முற்பட்ட போது, கருப்பாயி கையில் வெட்டுப்பட்டது என்றும், அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகள் எந்தவிதமான சம்பவத்தையும் செய்யவில்லை என்றும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

அ.த.கு.வி : இல்லை.

மறுவிசாரணை : இல்லை

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.07.22 07:49:27 +0530

Assistant Sessions Judge

Melur